பாடம் 6

மே 4 - 10

# அரசனின் அன்புக்கீதம்



## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *உன்னதப்பாட்டு, ஆதியாகமம் 2:7; 1கொரிந்தியர் 7:3-5; யோவான் 17:3; 1யோவான் 1:9; ரோமர் 1:24-27; கலாத்தியர் 5:24.*

**மனன வசனம்:** நீர் என்னை உமது இருதயத்தின்மேல் முத்திரையைப்போலவும், உமது புயத்தின்மேல் முத்திரையைப்போலவும் வைத்துக்கொள்ளும்; நேசம் மரணத்தைப்போல் வலிது; நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது; அதின் தழல் அக்கினித்தழலும் அதின் ஜுவாலை கடும் ஜுவாலையுமாயிருக்கிறது. உன் 8:6.

திருமணம்செய்தவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதங்கள் இருப்பதுபோல விசேஷித்த சவால்களும் உண்டு. தாம்பத்தியம் என்பது ஓர் ஆசீர்வாதம். சரியான நேரத்தில் சரியான இடத்தில் இந்த ஈவு பயன்படுத்தப்பட்டால், அது அன்பின் பலத்த வெளிப்பாடாக இருக்கமுடியும். தாம்பத்திய உறவு தவறானது என்று வேதாகமம் சொல்வதாக பலர் நினைக்கிறார்கள். அந்தக் கருத்து தவறானது. தேவன் தம்முடைய மக்களுக்குக் கொடுத்த அற்புதமான இந்த ஈவை மனிதர் தவறாகப் பயன்படுத்துவதுதான் தவறு.

உன்னதப்பாட்டில், சூலேமைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் அவள்மணாளனுக்குமிடையேஇருந்தஉறவைப்பற்றிப்பார்க்கிறோம். சாலொமோன்தான் அந்த மணமகன் என்கிறார்கள். தாம்பத்தியத்தின் மகிழ்ச்சிகளைக் குறித்து இந்தப் புத்தகம் பேசுகிறது. தேவனுக்கும் விசுவாசிகளுக்குமிடையே உள்ள உறவுக்கு உருவகமாக இந்த புத்தகத்தை நாம் பார்த்தாலும், உண்மையிலேயே ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்குமிடையே இருந்த மனித உறவுதான் இதில் முதலாவதாக கூறப்படுகிறது. திருமணத்தைப்பற்றி இந்தப் புத்தகம் என்ன சொல்கிறது என்று இந்த வாரம் பார்ப்போம்.

*2019, மே 11 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு மே 5

## பிரிக்கமுடியாத வாழ்க்கை

**கேள்வி: மனித உடலைப்பற்றி வேதாகமத்தின் பார்வை என்ன? ஆதி 2:7; சங் 63:1; 84:2; 1கொரி 6:19,20; 1தெச 5:23.**

மனிதன் இரட்டைத் தன்மை உடையவன் என்று சில மதங்கள் சொல்கின்றன. உடல் மோசமானது என்றும், ஆவி நல்லது என்றும் அந்த மதங்கள் சொல்கின்றன. மனித உடலும் அதன் தாம்பத்திய தன்மையும் சேர்ந்துதான் முழு மனிதன் என்று வேதாகமம் சொல்கிறது. ஜீவன் என்பது, உடலும் ஆவியும் சேர்ந்தது. ஆதி 2:7. தேவனைத் தொழுது கொண்டபோது, சங்கீதக்காரன் தன்னை முழுமையாக அவரிடம் ஒப்படைத்தான். சங். 63:1; 84:2. தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற ஒரு மனிதன் தன்னை முழுமையாக தேவனுக்கென்று ஒப்படைத்தல்தான் தன்னைப் பரிசுத்தப்படுத்துதல் ஆகும்.

**கேள்வி: தாம்பத்திய உறவு தவறானதல்ல எனும் கருத்தை உன்னதப்பாட்டு வெளிப்படுத்துகிறது. அந்த மனப்பான்மை இந்த வசனங்களில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் பாருங்கள்? உன்னதப்பாட்டு 1:2,13; 2:6; 5:10-16; 7:1-9.**

வேதாகமத்தின் ஒரு பகுதியான உன்னதப்பாட்டு முழுவதிலும் மனித உடல் பாராட்டைப் பெறுகிறது. திருமண வாழ்வின் உடல் அம்சங்கள் சங்கடமானவை அல்ல. பல கலாச்சாரங்களில் தாம்பத்தியத்தைக்குறித்து வெளிப்படையாக மக்கள் பேசுவது இல்லை. தம்பதியர் தங்கள் நெருக்கமான உறவை வெளிப்படையாக பேசுவது இல்லை. தேவ விழுமியங்களோடு சரியான தகவல்களை பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க முடிவதில்லை. ஆனால், வேதாகமம் இவ்வாறு வெளிப்படையாக பேசுவதால், தாம்பத்தியம்பற்றி கண்ணியமான முறையில் பேசிக் கொள்ள வேண்டும். ஏனெனில், இது தேவனுடைய ஈவு.

சில கலாச்சாரங்களில் தாம்பத்தியம் என்பது முக்கியமில்லை என்று நினைக்கிறார்கள்; வேறு சில கலாச்சாரங்களில், தாம்பத்தியம் ஆனது இழிவான மிருகத்தன்மை என்றும், வெட்கக்கேடானது என்றும், அதைக் குறித்துப் பேசக்கூடாது என்றும் நினைக்கிறார்கள். இந்த இரண்டு பார்வைகளுமே தவறு என்பதை வேதாகமம் எவ்வாறு காட்டுகிறது?

**திங்கள்** மே 6

# நேசப் பாடலின் நேசர்கள்

**கேள்வி:** உன்னதப்பாட்டு விவரிக்கிற அன்பின் பல்வேறு அம்சங்களைக் குறிப்பிடுங்கள்.

உன் 1:2,13; ______

உன் 2:10-13,16; ______

உன் 3:11; 4:1-7; ______

உன் 5:16. ______

நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து எவ்வாறு நேரம் செலவிடுகிறார்கள் என்பதை உன்னதப்பாட்டு காட்டுகிறது. இங்கே இரண்டு நல்ல நண்பர்கள் வாழ்க்கைத் துணைகளாக மாறுகிறார்கள். ''இவர் என் சிநேகிதர்'' என்ற மனைவி சொல்கிறாள். உன் 5:1. தாம்பத்திய உறவின் சாயல் இல்லாமல் காட்டுகிற அன்பை 'சிநேகிதர்' என்கிற வார்த்தை உணர்த்துகிறது. தங்கள் வாழ்க்கைத்துணை தங்களுடைய சிநேகிதராக இருக்கப்பெற்ற கணவன்-மனைவி பாக்கியமுள்ளவர்கள். அந்தரங்கப் பாராட்டுதல்கள், பலத்த ஈர்ப்பை வெளிப்படுத்துகிற அன்பின சைகைகள், ஒருவருக்கொருவர் கொடுக்கிற உணர்வுபூர்வமான சந்தோஷங்கள் ஆகியவற்றை இந்தக் கவிதைமுழுவதிலும் பார்க்கிறோம். தாம்பத்திய அன்பின் இயல்பான நெருக்கங்கள் நம்மைப் படைத்தவர் நமக்குத் தந்தவை. தம்பதிகள் தங்கள் உள்ளத்தில் தேவ அன்புக்கு இடம்கொடுக்கும்போது, மனித அன்பானது தூய்மையானதாக மாறுகிறது.

இந்த வசனங்கள் அன்பைப்பற்றிய மிக உயர்ந்த எண்ணங்களை வெளிப்படுத்துகின்றன. உண்மையான அன்பு, மனித இதயத்தில் இயல்பாக இல்லை; இது பரிசுத்த ஆவியின் வரம். ரோமர் 5:5. கணவன் மனைவியை இத்தகைய அன்பு நீடித்த உறவுக்குள் பிணைக்கிறது. பெற்றோர்-பிள்ளைகள் உறவில் இந்த அன்பு தேவை. அப்படி இருந்தால், பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் நம்பத் துவங்குவார்கள். இந்தச் சுயதியாக அன்புதான் விசுவாசிகளை கிறிஸ்துவுக்குள் ஒரு சரீரமாக இணைக்கிறது. வாழ்க்கைத் துணைகள் மத்தியில் இந்த அன்பு ஊக்கமாகச் செயல்படவேண்டுமென்று உன்னதப்பாட்டு கூறுகிறது.

---

தம்பதிகளின் நெருக்கம் எவ்வாறு தேவனோடு நாம் வைத்திருக்க வேண்டிய நெருக்கத்தை உணர்த்துகிறது? முழுவதுமாக தங்களை ஒப்புக்கொடுத்தல், ஒன்றாக நேரம் செலவிடுதல் போன்று வேறு என்ன செயல்களையும் குறிப்பிடலாம்?

______

______

______

______

## அன்பான அறிவு

உன்னதப்பாட்டில் வருகிற தம்பதியர் முதல் மனிதனும் மனுஷியும் இல்லைதான். ஆனால், அவர்களுடைய நிலைமை ஏதேன் தோட்டத்தை நினைவூட்டுகிறது. 'இருவரும் ஒரே மாமிசமாய் இருப்பார்கள்' என்கிற ஆண்டவருடைய வார்த்தையானது உன்னதப்பாட்டின் உருவகங்களில் வெளிப்படுகிறது. ஆதியாகமம் 2:24,25.

**கேள்வி: தம்பதியரின் பரஸ்பர நெருக்கத்தை உன்னதப்பாட்டு எவ்வாறு விளக்குகிறது? உன் 4: 7-5: 1. பவுலின் போதனை இதற்கு எப்படி ஒத்திருக்கிறது? 1கொரி 7:3-5.**

---

"என்னுடன் வா" என்று சாலொமோன் அவளை அழைக்கிறார். உன் 4:8. மணமகள் பிற்பாடு அவரிடம், "என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வருவாராக" என்று அழைக்கிறாள். உன் 4:16. "என் மணவாளியே! நான் என் தோட்டத்தில் வந்தேன்" என்று சாலொமோன் பதிலளிக்கிறார். உன் 5:1. இந்த உறவில் கட்டாயப்படுத்தலுக்கோ, தந்திரமான வார்த்தைகளுக்கோ இடமில்லை. "என்னுடைய தோட்டம் அவருடைய தோட்டம்" என்பதே மணமகளின் பார்வை.

சாலொமோன், சூலமித்தியாள் ஆகிய இரண்டு பெயர்களுமே 'சமாதானம், முழுமை' என்கிற அர்த்தத்தைக் கொடுக்கிற ஷாலோம் என்கிற எபிரேய வார்த்தையிலிருந்து வந்தவை. அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பரவசமடைந்தார்கள். உன் 4:1-5; 5:10-16. கவிதையின் வரிகளிலும் வார்த்தைகளிலும் அவர்களுடைய உறவில் இருந்த சமநிலை வெளிப்படுகின்றது. "என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்" என்று அவள் சொன்னபோது, "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்" என்று ஏதேனில் ஆதாம் சொன்ன கருத்து வெளிப்படுகிறது. உன் 2:16; ஆதி 2:23.

**கேள்வி: திருமண உறவைப்பற்றிப் பேசும்போது அறிந்துகொள்ளுதல் என்கிற வார்த்தை வருகிறது. தேவனுடைய உறவைப் புரிந்துகொள்ள இது எவ்வாறு உதவுகிறது? ஆதி 4:1,25; 1சாமு 1:19; லூக்கா 1:34; யோவான் 17:3; 1 கொரி 8: 3.**

---

கணவன்-மனைவியின் தாம்பத்தியத்தை சுட்டிக்காட்ட 'அறிதல்' என்கிற வார்த்தையை வேதாகமம் பயன்படுத்துகிறது. இதில் எந்த ஒளிவுமறைவும் இன்றி ஒருவருக்கொருவர் தங்களை வெளிப்படுத்துகிறார்கள். இரண்டு உடல்கள் மட்டுமல்ல, இரண்டு உள்ளங்களும் ஒன்றுசேர்கின்றன. இந்த 'அறிதல்' என்கிற வார்த்தையானது தேவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள உறவையும் சுட்டிக்காட்டுகிறது.

கணவன்–மனைவி உறவில் வெளிப்படுகிற தோழமை, அர்ப்பணிப்பு, அளவில்லா இன்பம் அனைத்தையும் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையே இருக்கக்கூடிய இரகசியமான ஐக்கியத்திலும் நாம் பெறலாம்.

# சரியான நேரத்தில் அன்பு

உன்னதப்பாட்டு 4:8-5:1 ஐ வாசிக்கவும். இதுதான் இந்த புத்தகத்தின் மையமாக உள்ளது. சாலொமோனுக்கும் சூலமித்தியாளுக்கும் நடந்த திருமணம் இப்பகுதியில் வருகிறது.

**கேள்வி: சாலொமோன் பின்வரும் வசனங்களில் குறிப்பிடுவது என்ன?**

**உன் 4:12,16** ____________________

**உன் 5:1** ____________________

**உன் 8:8-10** ____________________

திருமணம் ஆகும்வரை ஆண்களும் பெண்களும் கற்புடன் இருப்பது தேவதிட்டம் என்று உன்னதப்பாட்டு காட்டுகிறது. சூலமித்தியாளின் குழந்தைப் பருவத்தைப்பற்றி பேசும்போது, "அவள் மதிலா, கதவா?" என்கிற ஒரு கேள்வியை அவளுடைய சகோதரர்கள் எழுப்புகிறார்கள். மதில் என்பது திருமணம் வரை கற்புடன் வாழ்வது. கதவு என்பது திருமணத்திற்குமுன் கற்பை இழப்பது. உன் 8:8,9. "நான் மதில்தான்" இன்று சூலமித்தியாள் சொல்கிறாள். அதாவது, தன்னுடைய கணவனுக்காக தன் கற்பை காப்பாற்றி வருவதாக சொல்கிறாள்.

அவள் 'அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாய்' இருந்தாள். உன் 4:12. தன்னுடைய சொந்த அனுபவத்தின் அடிப்படையில், திருமணத்திற்கான படியில் ஞானமாக அடியெடுத்துவைக்கும்படி தன் தோழிகளுக்கு ஆலோசனை சொல்கிறாள். தகுதியான நேரம் வரும்வரை தீவிரமான நேசத்திற்குக் கட்டுப்பாடு வைத்திருக்கும்படியாக எருசலேம் குமாரத்திகளுக்கு மூன்றுமுறை அவள் ஆலோசனை சொல்கிறாள். உன் 2:7; 3:5; 8:4.

தன்னோடு வரும்படியாக தன்னுடைய மணவாட்டியை அந்த நேசர் இரண்டுமுறை அழைக்கிறார். உன் 2:10; 4:8. அவள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர், அவரை அவள் அழைக்கிறாள். உன் 4:16. அதை அவர் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறார். உன் 5:1.

அவள் தனக்கே தனக்கு சொந்தமானவள் என்று மகிழ்ச்சி அடைகிறார்: "உன் நேசம் எவ்வளவு இன்பமாயிருக்கிறது. உன் நாவின்கீழ் தேனும் பாலும் இருக்கிறது, உன் வஸ்திரங்களின் வாசனை லீபனோனின் வாசனைக்கொப்பாயிருக்கிறது. என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்." உன் 4:10-12.

தங்களுடைய தாம்பத்திய உணர்வால் உந்தப்பட்டபோது, தவறான தெரிவுகள் எடுத்துக் கொண்டவர்களுக்கு என்ன நற்செய்தி இருக்கிறது? 1 யோவான் 1:9; சங் 103:12; ஏசாயா 55:7; யோவான் 8:11.

# படைத்தவர் தந்த ஈவைக் காப்பாற்றுதல்

**கேள்வி: ஆணும் பெண்ணுமாக மனிதகுலத்தை தேவன் படைத்தபோது தேவனுடைய திட்டம் என்ன? ஆதி 1:26-28.**

இருவரும் தேவ சாயலை உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒரே மாமிசமானபோது, தேவத்துவத்தின் ஒருமைப்பாட்டைச் சுட்டிக்காட்டினார்கள். கணவனும் மனைவியும் தாம்பத்தியத்தின்போது தேவ சாயலில் இன்னுமொரு புது ஜீவனை உருவாக்குகிறார்கள்.

**கேள்வி: தேவனுடைய திட்டத்தின்படி நடக்காத உறவுகளைப்பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது? லேவி 20:7-21; ரோமர் 1: 24-27; 1 கொரி 6:9-20.**

மனிதனில் தேவ சாயலை மாற்றியமைக்கக்கூடிய வகையில், அவன் செய்கிற செயல் எதையும் வேதாகமம் ஒத்துக்கொள்வது இல்லை. சில நடைமுறைகளை விலக்கிவைத்து, அவை இல்லாமல் தாம்பத்தியத்தை சரியான முறையில் பயன்படுத்துமாறு தேவன் கூறுகிறார். அதற்குமாறாக ஒருவர் நடக்கும்போது, ஆத்துமாவில் குற்றவுணர்வு ஏற்படுகிறது.

**கேள்வி: பாவ உலகில் வாழ்கிற கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு தாம்பத்தியம்பற்றி வேதாகமம் என்ன வழிகாட்டுதலைத் தருகிறது? ரோமர் 8: 1-14; 1கொரி 6:15-20; 2கொரி 10:5; கலா 5:24; கொலோ 3: 3-10; 1தெச 5:23,24.**

கிறிஸ்துவின் வருகையின்போது பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு இன்றைய விசுவாசிகள் காத்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் மரணத்தால் நாமும் மரித்தவர்களாக இருப்பதாகவும், அவருடைய உயிர்த்தெழுதல் நாம் இப்போது ஜீவனுள்ளவர்களாக இருப்பதாகவும் விசுவாசித்து, அவர் வருகைக்குக் காத்திருக்கிறோம்.

தொடர்ந்து ஜெபித்து, விழிப்போடு இருந்து, ஆவியானவரின் வல்லமையைப் பெற்று, தங்களுடைய பாவ இயல்பை சிலுவையில் அறைந்து, சிந்தையிலும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய முயற்சி எடுக்கிறார்கள். அவர்களுடைய உடல் தேவனுக்கு சொந்தமானது என்பதால், தாம்பத்திய வாழ்க்கையிலும் அவர் சித்தப்படி தங்கள் உடலை பயன்படுத்த வேண்டியிருக்கிறது. தேவன் மன்னிக்கிறவராக இருக்கிறார். தங்களுடைய உடலைத் தவறான முறையில் பயன்படுத்தியவர்களுக்கும் கிறிஸ்தவ ஐக்கியத்தில் இடம்கொடுக்கிறார். ஆனால், தவறான பழக்கத்தில் அதிக காலம் இருந்தவர்களுக்கு அதிலிருந்து விடுதலைபெறுவதில் அதிக சிரமம் இருக்கலாம். வேறு சிலர் இந்தப் பிரச்சனையே வேண்டாம் என்று தனிமை வாழ்க்கை வாழ்ந்துவிடுகிறார்கள்.

சபையாக நாம் சந்திக்கிற ஓரினச்சேர்க்கையாளர்களை எப்படி நடத்த வேண்டும்? தாம்பத்தியத்தைப்பற்றிய அவர்களுடைய மனப்பான்மையை மனதில்வைத்து நாம் எவ்வாறு செயல்படலாம்?

## மேலும் படிக்க:

திருமணத்திற்கு கிறிஸ்துவின் ஆசீர்வாதம் உண்டு. அது ஒரு பரிசுத்த அமைப்பாகக் கருதப்படுகிறது. ஆண்டவருடைய திட்டங்களை எதிர்க்கிற மதம் உண்மையானது அல்ல. 'ஆண்களும் பெண்களும் திருமணம்செய்து, குடும்பத்தை உருவாக்கவேண்டும்' என்று தேவன் திட்டமிட்டிருந்தார். அந்த குடும்பங்கள் மதிப்பு மிகுந்தவை. பரலோகக் குடும்பத்தின் அடையாளங்களாக அவை இருக்கவேண்டும். ஏதேனில் துவங்கப்பட்ட இந்தத் திருமணம் எனும் அமைப்பை இயேசு தமது ஊழியத்தின் துவக்கத்தில் அங்கீகரித்தார். "திருமண நிகழ்ச்சியில் நான் கலந்துகொள்ளாமல் இருப்பது இல்லை" என்று காண்பித்தார். தூய்மையும் பரிசுத்தமும் சத்தியமும் நீதியும் இணைந்துள்ள திருமணமானது மனித இனத்திற்கு தேவன் கொடுத்த மாபெரும் ஆசீர்வாதங்களில் ஒன்று. உன்னதப்பாட்டு காண்பிப்பது போல் திருமண வாழ்வில் தாம்பத்தியம் மிகவும் அருமையான ஒன்று. ஆனால், வெளிப்புறமான அழகையும் சரீர சுகத்தையும்மட்டும் சார்ந்து, நிலையான உறவு ஏற்பட்டுவிடாது. வயதாகும் போது நம் உடல் அழியத்தொடங்குகிறது. உணவு, உடற்பயிற்சி, அழகு சிகிச்சை போன்றவை நம்மை எப்போதும் இளைஞர்களாகவே வைத்துவிடுவது இல்லை. சாலமோனும் சூலமித்தியாளும் ஏற்படுத்தின உறவு வாழ்நாள்முழுவதும் நிலைத்திருக்கிற உறவு. தாங்கள் ஒருவருக்கு ஒருவர் சொந்தம் என்று மூன்று முறை சொல்கிறாள். உன் 2:16; 6:3; 7:10. உன் 2:16இல், இருவரும் ஒருவருக்கு ஒருவர் சொந்தம் என்பதைக் குறிப்பிடுகிறாள். (எபே 5:21,33). உன் 6:3இல், கணவனுடைய உரிமையை முதலில்குறிப்பிட்டு,தன்னுடையகீழ்ப்படிதல்மனப்பான்மையைவெளிப்படுத்துகிறாள். (எபே 5:22,23). உன் 7:10இல், தனது கணவனுடைய பிரியத்தை சுட்டிக்காட்டுகிறாள். (எபே 5:24–32). இப்படிப்பட்ட அன்பு அழியாது. உன் 8: 7. அது உடைக்கப்பட முடியாத முத்திரை. உன் 8: 6.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *சாலொமோன் தன் மனைவியை எப்படி வர்ணிக்கிறார்? (உன் 4:1-5; 6:8; 7:1-9) முதலில், ஏவாளைப் பார்த்தபோது ஆதாம் பேசின வார்த்தைகளோடு ஒப்பிடுங்கள். (ஆதி 2:23). கணவன்மார் தங்கள் மனைவிகளை எவ்வாறு பார்க்கவேண்டும்? (எபே 5:28,29).*

2 *கிறிஸ்துவுக்கும் சபைக்குமிடையே இருக்கிற உறவின் உருவகம்தான் உன்னதப்பாட்டு என்று சிலர் நினைக்கிறார்கள். அளவுக்கு மிஞ்சி உருவகப்படுத்தாமல், உறவின் எந்தெந்தத் தன்மைகளை ஒப்பிடலாம்? ஏசா 54:4,5; எரே 3:14; 2கொரி 11:2.*

3 *நம் வாழ்க்கைத் துணையை நம் சொற்களால் உற்சாகப்படுத்தலாம், அல்லது கேவலப்படுத்தலாம். நம் குடும்பத்தை வளர்க்கலாம், அல்லது அழிக்கலாம். நீங்கள் எவ்வாறு உங்கள் சொற்களைப் பயன்படுத்துகிறீர்கள்? நீதி 31:26; உன் 5:16; நீதி 25:11; யாக் 1:26; 3:5-11.*

# இனம்புரியாத வெளிச்சம்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ, அட்வென்டிஸ்ட் மிஷன்**

தென் சாம்பியாவில், தன் சொந்த ஊரான மஷுபுகாவிலுள்ள ஒரு மதுபான விடுதியில் நன்றாகக் குடித்துவிட்டு, பாடல்பாடிக்கொண்டே வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தாள் ரூத் ஜெரே. அது ஒரு வெள்ளிக்கிழமை சாயங்காலம். அன்று முழுவதும் அவள் பீர் குடித்திருந்தாள். திடீரென இனம்புரியாத ஒரு வெளிச்சம்பளிச்சென ஆகாயத்தில் தெரிந்தது. பாடல் நின்றது, அவள் புத்தி தெளிந்தது. உடனே அந்த ஒளியும் மறைந்துபோனது.

நடுங்கியவாறே வீட்டிற்குச் சென்றாள். அன்று இரவில் தன் கணவனிடமும், தன் 14 பிள்ளைகளிடமும் அதுபற்றி ஒன்றுமே சொல்லவில்லை. காலையில் எழுந்ததும் தன் கணவனிடம், “நேற்று இரவு நான் வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருக்கும்போது ஒரு பெரிய வெளிச்சத்தைப் பார்த்துப் பயந்துவிட்டேன்” என்று சொன்னாள்.

“இனி பீர் குடிக்காதே. தேவன்தாம் உன்னை எச்சரித்திருக்கிறார்” என்று அவளுடைய கணவன் கூறினான்.

அன்று தொற்காள் ஊழியர் ஒருவர் ஜெரேவின் வீட்டிற்கு வந்து, அட்வென்டிஸ்ட் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி அழைத்தார். முந்தின நாள் ஏற்பட்ட அனுபவம் நினைவுக்கு வரவே அட்வென்டிஸ்ட் கூட்டத்தில் ஜெரே கலந்துகொண்டாள்.

ஜெரே ஒர் அட்வென்டிஸ்டுதான். ஆனால் அவளுடைய கணவன் வேறு சபையைச் சேர்ந்தவன். அதனால்தான் திருமணத்திற்கு பிறகு அவள் அட்வென்டிஸ்டாக இல்லை. மதுபான விடுதியில் அவன் சாக்ஸஃபோன் வாசிப்பான். ஜெரே வீட்டுத் தின்பண்டங்கள் விற்பாள். பிறகு இருவரும் குடித்துக்கொண்டே இருப்பார்கள்.

தன்னுடைய சின்னஞ்சிறு பிள்ளைகளைக் கவனிக்காமல், காலையிலிருந்து மாலை வரையிலும் தான் குடித்து நேரத்தை வீணடித்தது உடனே அவளுக்குப் புரிந்தது.

குடித்தே பழகிவிட்டவளுக்கு, அதிலிருந்து வெளியேற கஷ்டமாக இருந்தது. இரவில் பயந்துபோய் எழுவாள், அழுவாள், “தேவனே, என் பிள்ளைகளைக் கவனிக்காமல் வாழ்ந்துவிட்டேன். பீர் குடிக்கும் பழக்கத்தை மறக்க எனக்கு உதவும்” என்று ஜெபித்தாள்.

பிறகு மதுபான ஆசை அவளைவிட்டு நிரந்தரமாக நீங்கியது. அவள் சுயபுத்தியுடன் அலைவதைப்பார்த்த ஊர்காரர்களுக்கு ஆச்சரியம். “மந்திரவாதி எந்த வேரைக் கொடுத்தார், அதைச் சொல்லு. நாங்களும் அதைச் சாப்பிட்டு குணமாகவேண்டும்” என்றார்கள்.

“ஜெபம்தான் என் மருந்து” என்று ஜெரே கூறினாள். ஞானஸ்நானம் பெற்றாள். அவள் கணவன் உட்பட 10 பேர் அவள் மூலம் ஞானஸ்நானம் பெற்றார்கள்.



**“தேவனைத் தொழுதுகொள்வதுதான் வாழ்க்கையில் முக்கியம்” என்று கூறுகிறாள் 62 வயது ஜெரே.**